**Sessions Case No. 7/2019**

P.W.7 – டாக்டர் சரவணக்குமார்

22.07.2022

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரீ தரப்பு)**

இறந்துபோன நபர் டி.வி.எஸ் 50 வாகனத்தில் சென்று அவர் மதகின் மீது மோதி விபத்துக்கு உட்படும்போது அந்த வாகனம் தீப்பற்றி எரிந்திருந்தால் இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் தீக்காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வெளிப்புற காயங்கள 2 முதல் 5 வரை உள்ள காயங்கள் எந்த ஒரு கூர்மையான ஆயுதத்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிரேத பரிசோதனை செய்யும்போது நான் எடுத்த குறிப்பின் அடிப்படையில்தான் எனது அறையில் வைத்து அறிக்கை தயார் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு உதவியாக துப்புரவு தொழிலாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பிணவறையில் இருப்பார்கள் என்றால் சரிதான். அவர்கள் கொடுத்த குறிப்பின் அடிப்படையில்தான் நான் அறிக்கை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனையின் போது வீடியோ எடுக்கப்படவில்லை.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பு)**

2ம் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக் கொள்கிறார்.

**மறுவிசாரணை**

இல்லை

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 7/2019**

Deposition of Witness for Prosecution : P.W. 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில் | தந்தை பெயர் | : | சுப்ரமணியன் |
| ஊர் | : | காரைக்கால் | தாலுக்கா | : | காரைக்கால் |
| ஜாதி | : | -- | வயது | : | 40 |
| மதம் | : | -- | தொழில் | : | வெல்டிங் வேலை |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 22.07.2022.

**முதல் விசாரணை**

நான் காரைக்கால் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் 12.02.2018 அன்று மாலை 06.00 மணிக்கு அருண்மொழித்தேவன் கிராம நிர்வாக அலுவலகத்துக்கு சென்றிருந்தேன். அப்போது, ஹரிஹரனும், கீதாவும் வந்து மகேந்திரன் இறப்பு சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலரிடம் சொன்னார். கிராம நிர்வாக அலுவலர் நாகூர் காவல் நிலையத்துக்கு தகவல் சொன்னார். கிராம நிர்வாக அலுவலகத்தில் இருவரையும் நாகூர் காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்கள். ஹரிஹரன் வீட்டில் கை கோடாளியும், கீதா வீட்டில டீசல் கேனும் இருப்பதாக சொன்னார்கள். அதன் அடிப்படையில் போலீசார் என்னை அழைத்துகொண்டு ஹரிஹரன் வீட்டில் கைகோடாளியும், கீதா வீட்லிருந்து டீசல் கேனையும் ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன். அந்த அவற்றை சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக அவர்கள் இருவரும் சொன்னார்கள். ஆஜர் எதிரிகள்தான் ஹரிஹனும், கீதாவும் ஆவார்கள். கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ. 7 ஆகவும், கை கோடாளியும் மற்றும் டீசல் கேனும் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பு)**

அ.சா.2 மனோகர் எனது மைத்துனர். அவர் மனைவி சுப்புலட்சுமி எனது சகோதரி ஆவார். மனோகர் மற்றும் சுப்புலட்சுமி ˙ அ.சா 14 அனுஷ்கா பிறந்ததிலிருந்து வளர்த்து வருகிறார் என்றால் சரிதான். அ.சா.15 சுபர்ஷ்

என்னுடைய வெல்டிங் கம்பெனியில் தான் வேலை செய்கிறார். நான் சொன்னது போல நான் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றும், நான் போட்ட கையெழுத்துக்கள் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கபட்ட ஆவணத்தில் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேன் என்றால சரியல்ல. நான் அன்று மொத்தம் எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் நினைவில்லை. நான் போட்ட கையெழுத்துக்கள் கிராம நிர்வாக அலுவலகத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான். எனது மைத்துனர் அ.சா.2 மனோகரன் கேட்டு கொண்டதற்கிணங்க நான் சில தவறான சங்கதிகளை சாட்சியமாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பு)</u>**

2ம் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக் கொள்கிறார்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, NAGAPATTINAM.**

**Sessions Case No. 7/2019**

Deposition of Witness for Prosecution : P.W. 15

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுபாஸ் | தந்தை பெயர் : | மதியழகன் |
| ஊர் | : அருண்மொழிதேவன் காடு | தாலுக்கா : | நாகப்பட்டினம் |
| ஜாதி | : -- | வயது : | 39 |
| மதம் | : -- | தொழில் : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 22.07.2022.

**முதல் விசாரணை**

நான் நாகப்பட்டினம் மாவட்டம், அருண்மொழித்தேவன் காட்டில் வசித்து வருகிறேன். நான் 12.02.2018ம் தேதி வீட்டில் இருந்து கடைத்தெருவுக்கு வந்தேன், அப்போது நரித்திண்ண வாய்க்கால் என்ற இடத்தல் மகேந்திரன் பிரேதம் எரிந்த நிலையில் இருப்பதாக கேள்விப்பட்டு நான் அங்கு போய் பார்த்தேன். அங்கு மதியழகன் என்ற எனது ஊர்க்காரரும் நானும் சென்று பார்த்தோம். அங்கு போய் பார்த்தபோது மகேந்திரன் எரிந்த நிலையில் இருந்தார். அங்கு போலீசார் வந்திருந்தார்கள். அவர்கள் அந்த இடத்தை பார்வையிட்டு, ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண், எரிந்த நிலையில் உள்ள 50ரூபாய் நோட்டு, நீலமும், வெள்ளையும் கலந்த கட்டம் போட்ட சட்டை எரிந்த நிலையில் இருந்தது அவற்றை ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், மதியழகனும் கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த இடம் அருகே எரிந்த நிலையிலும், அருகே வரப்பு, வாய்க்கால், வேப்பமரம் இருந்தது. அங்கு ஆய்வாளர் தயாரித்த பார்வை மகஜரில் நான் கையெழுத்து செய்யவில்லை. நான் பார்த்து விட்டு அந்த இடத்தை விட்டு வந்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பகுதி அளவில் பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார்.**

**ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்திலிருந்து 10 அடி தூரத்தில் சிமெண்ட்டில் ஆன கட்டையும், அதற்கு வடபுறமாக கணேசனின் சாகுபடி வயலும், அதன் பின்புறமாக வரப்பில் வேப்பமரமும் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் சம்பவ இடத்திற்கு தென்புறமாக கந்தவேல் சாகுபடி வயலும், அதன் வடதெற்காக செல்லும் சுமார் 2 அடி அகலம் உள்ள வயல்வெளி வரப்பும் இருக்கிறது என்றால் சரிதான். பார்வை மகஜரில் எனது கையெழுத்தின் மீது நீதிமன்ற முத்திரை போடப்பட்டதால் என்னால் சரியாக அடையாளம் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை(2ம் எதிரி தரப்பு)</u>**

கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்தை என்னிடம் வாங்கியவர்கள் எந்த நிலையில் உள்ள போலீசார் எழுதி வாங்கினார்கள் என எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு நான் போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்துதான் காவல்நிலையத்தில் எழுதப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து போட்டேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியபடி நான் சொன்ன இடத்தில் எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு நான் முதல் விசாரணையில் சொன்ன இடமானது எனக்கு ஏற்கனவே பரிட்சையமான இடம்தான், அந்த இடத்தில் நான் சொல்லியபடி சொன்ன நேரத்தில் போலீசார் வரவில்லை என்றாலும், நான் அந்த இடத்திற்கு போகவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோன மகேந்திரனின் அண்ணன் மனோகரனை எனக்கு தெரியும். அ.சா.2 மனோகரன் எனக்கு நண்பர் என்பதால் அவர் கேட்டுகொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பு)</u>**

2ம் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக் கொள்கிறார்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை